முருகப்பெருமான் துணை

**மகான் நந்தீஸ்வரர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.07.2023**, வெள்ளிக்கிழமை

1. ஞானவாழ்வு பெற வேண்டி
ஞாலமதில் மக்களை நோக்கி
ஞான பூசையாக ஞானிகள் பூசை
ஞாலமதில் நடத்தும் தவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தானுன் பெருமை கூறியே
அவனியில் அறிவுரை ஆசியை
அருளுவேன் சோபகிருது நள்ளி திங்கள்
3. திங்களிலே பஞ்சதிகதி புகர் வாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 05 ம் நாள், 21.07.2023, வெள்ளிக்கிழமை)
தேசிகனுக்கு நந்தீஸ்வரர் யானும்
ஓங்காரமயமாக உலகம் தேறி
உரைத்திடுவேன் பேருலகம் காக்கப்பட
4. காக்க காக்க கனகவேல் காக்க
கலியினில் எந்த நிலைவந்தாலும்
ஆக்கமுடன் நாகாக்கப் பட்டு
அன்புடன் கனிவான சொற்களுடன்
5. சொற்களுடன் உலகை அனுகி
சூட்சுமம் பட தேற்றும் பலம்
அற்புதம் தா என வேண்டிவர
ஆறுமுகனார் வெளிப்பட்டு உலகில்
6. உலகினில் பாமரர் தனக்கும்
உண்மை தொண்டனுக்குமாகி
காலமதில் இறங்கி காட்சி
கலியினில் நடந்தேறுமப்பா

7. அப்பனே கிடைத்த வரத்தை
ஆக்கமான சேவை தன்னை
தப்பாக பயன்படுத்தினால்
தன்நிலை இறங்கி நோக்கம்
8. நோக்கம் காலங்கள் மேவி
நிலை தடுமாற நேருமப்பா
தேக்கமென சரணாகதி தன்னை
தேர்வு செய்த மக்களுக்கு
9. மக்களுக்கு மகா சக்தியாக
மனதில் வெறுப்பு விருப்புமின்றி
ஆக்கமின்றி ஞானிகள் இறங்கி
அற்புதம் தந்து வருகவேணும்
10. வருகவே சோதனை என
வதைகள் சில நேர்ந்தால்
தரும தயவு நிலையில் தடுமாறி
தரணியோர் தடமாற நேருமப்பா
11. அப்பனே சரணாகதி என்றால்
அனைத்தும் உன்அடியே ஆகும்
தப்பான வழிகள் நடத்தாமல்
தக்க காப்புடன் தேற்றுவதே முழுமை நிலை ஆகும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—